**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.105** **நாள்: 30.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை புனரமைத்து பராமரித்தல் மற்றும் நிலம் மாசுபடுதலை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனங்கள் சமூக பொறுப்பு பங்களிப்பு நிதியில் (CSR Fund) பெருமளவு மேற்கொள்ள வேண்டும் என ஆணையாளர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களை புனரமைத்து புத்துயிர் அளிக்கவும், அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும், பெரு நகர சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சேகரமாகும் திடக்கழிவுகளை நவீன தொழிநுட்ப முறைகளை கையாண்டு நிலம் மாசுபடுதலை தவிர்க்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் வழிகாட்டுதலின் படியும், பல்வேறுவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர் நிலைகளை புனரமைத்தல், நவீன தொழில்நுட்ப யுக்திகளை பயன்படுத்தி திடக்கழிவுகளை கையாண்டு, நிலம் மாசுபடுதலை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்ற பணிகளை பெருநிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பு பங்களிப்பு (Corporate Social Responsibility) நிதியில் மேற்கொள்ளவது தொடர்பாக தனியார் தொழில் நிறுவனங்களுடனான ஆலோசனை கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அம்மா மாளிகை கூட்டரங்கில் இன்று (30.07.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது,

பெருநகர சென்னை மாநகராட்சி கடந்த இரு ஆண்டுகளில் பராமரிப்பு இல்லாமல் இருந்த 210 நீர்நிலைகளை கண்டறிந்து சீரமைக்கும் பணியில் போர்க்கால அடிப்படையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு நீர்நிலைகளில் சீரமைக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி, சென்னை சீர்மிகு நகர திட்ட நிதி (SMART CITY), தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள், பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு பங்களிப்பு (Corporate Social Responsibility) நிதி ஆகியவற்றின் மூலம் சீரமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நீர்நிலைகளை புனரமைக்க தனியார் நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் சமூக பொறுப்பு பங்களிப்பு (Corporate Social Responsibility) நிதியில் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க மாநகராட்சிக்குட்பட்ட அரசு கட்டிடங்கள், தனியார் கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தோடு இணைந்து ஒரு வார்டிற்கு ஒரு குழு மூலம் 200 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, இதன் மூலம் சுமார் இரண்டு இலட்சம் வீடுகளில் மழை காலத்திற்கு முன்பாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் இருப்பதை ஆய்வு செய்ய இருப்பதாகவும் இப்பணிகளை மேற்கொள்ளவும், தனியார் நிறுவனங்கள் நிதியுதவி அளிக்க முன்வர வேண்டும் என தெரிவித்தார்கள்.

இதை தவிர்த்து பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் நாளொன்றுக்கு சுமார் 4880 மெட்ரிக் டன் அளிவிலான திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகிறது. இத்திடக்கழிவுகளை அனைத்தும் மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகின்றன. இத்திடக்கழிவுகளினால் நிலம் மாசுபடுவதோடு மட்டுமின்றி நிலத்தடி நீரும் மாசுபட அதிக அளவு வாய்ப்புகள் உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு திடக்கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து மக்கும் குப்பையை உரமாகவும், மக்காத குப்பையை மறுசுழற்சி செய்யவும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தனியார் நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையை நவீன தொழில்நுட்ப உதவியுடன் கையாள தேவையான பணிகளை மேற்கொள்ளவும் தங்களின் பங்களிப்பை அளிக்க வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் அதிக கூடும் இடங்கள், நீர் நிலைகள், பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் கடற்கரைகள் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பங்களிப்புடன் பிளாக்கிங் (Plogging) என்ற நின்று, குணிந்து குப்பை சேகரிக்கும் உடற்பயிற்சி மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக கடந்த ஞாயிற்றுக் கிழமை (28.07.2019) அன்று மவுண்ட் பூந்தமல்லி சாலையிலுள்ள போரூர் ஏரியில் நடைபெற்ற பிளாக்கிங் உடற்பயிற்சி நிகழ்ச்சியின் மூலம் அப்பகுதியிலிருந்து சுமார் 3.5 மெட்ரிக் டன் அளிவிலான குப்பை சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. இதுபோன்ற தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளில் தனியார் நிறுவன ஊழியர்கள் பங்குபெற்று சென்னை மாநகரை தூய்மையாக பராமரிக்க முன்வர வேண்டும்.

எனவே, தனியார் நிறுவனங்கள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நீர்நிலைகளை புனரமைத்து பராமரிக்கவும், நிலம் மாசுபடுதலை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும், பெருமளவு சமூக பொறுப்பு பங்களிப்பு நிதியில் மேற்கொள்ள முன்வர வேண்டும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட வங்கிகளின் பிரதிநிதிகள், தனியார் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படட 80 நிறுவனங்களை சார்ந்த அனைத்து பிரதிநிதிகளுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஆணையாளர் அவர்கள் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர்.சீதாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், தலைமை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) திரு.எல். நந்தகுமார், மேற்பார்வை பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகளின் பிரதிநிதிகள், தனியார் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**